FIRST INFORMATION REPORT

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

Under Section 173 BNSS முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8129870

1. District : திருவாரூர் PS: V&AC Year: 2026 FIR No.: 3 Date: 24.8.26
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as amended 2018 Sections பிரிவுகள்: U/s 7
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : D/o Date to : 2.8.2026.14.30 Annainagar Velankanni
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to : 7.8.2026.14.00 AE office WRD Thiruvarur
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date: Time : 17.8.2026.13.00 SDO office WRD Thiruvarur
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம் 20.8.2026-12.30 SDO office WRD Thiruvarur
(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் D/R நேரம் 24.8.2026-07.00 hrs

4. Type of Information : Written/ Oral : FIR 24.8.2026-09.00 hrs
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address : 8 km தெற்கு நீர்வளத்துறை அலுவலகம் திருவாரூர்
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : A. அபிஷேக் (b) Father's/ Husband's Name : ஆன்னை
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 1998 (d) Nationality : (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : (g) Address : NO-1200/17, அன்னை நகர், மேல நாயனாமபுரம், ஹரிவாட்கம்-2 நாகப்பட்டினம் மாவட்டம்
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
(1) திரு. மாணிக்கவேல் SDO நீர்வளத்துறை அலுவகம் திருவாரூர்
(2) திரு. ஜெனார்த் AE நீர்வளத்துறை அலுவகம் திருவாரூர்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

01/08/2016

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் G. R. CHITRA
Rank: நிலை .....No. எண்.....
Inspector of Police
VSAC Thiruvarur

திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 03/2026 சட்ட பிரிவு 7 of Prevention of Corruption Act 1988 as amended 2018 –ன் முதல் தகவல் அறிக்கையின் காலம்-12-ன் தொடர்ச்சி:

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது</u>: இன்று 24.08.2026-ஆம் தேதி 07.00 மணிக்கு திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் G.R.சித்ரா ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் பரிந்துரைத்து எனக்கு அனுப்பிய திரு. A.அபினேஷ், த/பெ.ஆன்றனி என்பவர் கொடுத்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் A.அபினேஷ், த/பெ.ஆன்றனி, நம்பர்.1200/17, அன்னை நகர், பிரதாபராமபுரம், விரிவாக்கம்-2, நாகப்பட்டினம் மாவட்டம். பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவாரூர். அய்யா, நான் நாகப்பட்டினம், அன்னை நகரில் தற்காலிகமாக வசித்து வருகிறேன். என்னுடைய சொந்த மாவட்டம் கன்னியாகுமரியாகும். நான் Diploma in Civil படித்துள்ளேன். நான் கடந்த 7 வருடமாக வெளி நாட்டில் வேலை பார்த்தேன். 2026 ஆம் வருடம் மார்ச் மாதம் வெளிநாட்டில் இருந்து ஊருக்கு வந்தேன். நான் வெளிநாட்டில் இருந்து ஊருக்கு வரும்போது எனது குடும்பத்துடன் வேளாங்கண்ணி கோவிலுக்கு வந்து செல்வேன். வேளாங்கண்ணி அருகில் லாட்ஜிகள் அதிகம் உள்ளதால், நானும் வேளாங்கண்ணியில் லாட்ஜ் கட்டலாம் என்று கடந்த 2024 ஆம் ஆண்டு நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வட்டம், பிரதாபராமபுரம் வருவாய் கிராமத்தில் அன்னை நகரில் மனை எண்.16 புல எண்.349/38A1A1A-வில் சுமார் 1400 சதுரடி இடத்தினை திருவாரூர் கொடிக்கால்பாளையத்தை சேர்ந்த திரு.முகமது இஸ்மாயிலிடமிருந்து வாங்கி திருப்பூண்டி சார்பதிவாளர் ஆவண எண்.2269/2024 தேதி 10.11.2024-ன்படி எனது பெயரில் பத்திரப்பதிவு செய்து வைத்திருந்தேன். மனை எண்.17 மற்றும் 18-யை எனது சொந்த அண்ணன் திரு.டெல்வின் ஜான் வாங்கி பத்திர பதிவு செய்துள்ளார். பின்னர் வெளிநாட்டில் சம்பாரித்த தொகையை கொண்டு நான் வாங்கிய வேளாங்கண்ணி இடத்தில் லாட்ஜ் கட்டலாம் என 2026 மார்ச் மாதம் ஊருக்கு வந்த போது முடிவு செய்து ஏப்ரல் கடைசி வாரத்தில் லாட்ஜ் கட்டுமான பணிகளை தொடங்கினேன். தரை தளத்தில் கட்டிடம் கட்டப்பட்டு Roof போடப்பட்டுவிட்டது. எனது லாட்ஜிக்கும் ECR ரோட்டிற்கும் இடையில் சிறிய வாய்கால் உள்ளது. கட்டிடம் கட்டுவதற்கான கட்டுமான பொருட்களை எனது இடத்திற்கு கொண்டுவருவதற்கு மிகவும் சிரமமாக உள்ளதால் வாய்க்கால் மீது என் சொந்த செலவில் சிறுபாலம் அமைக்கலாம் என முடிவு செய்தேன். பாலம் கட்ட அனுமதி வாங்குவதற்கான விண்ணப்பத்தினை திருவாரூர் நீர்வளத்துறையில் கொடுக்க வேண்டும் என்று விசாரித்து தெரிந்துக்கொண்டேன். எனது சொந்த செலவில் 30 அடி அகலம் 10 அடி நீளம் அளவுள்ள கான்கீரிட் சிறிய பாலம் கட்டுவதற்காக பொதுபணித்துறையில் தடையில்லா சான்று பெறுவதற்காக 30.06.2026-ந் தேதி திருவாரூர் வந்து PWD நீர்வளத்துறை

வெண்ணாறு வடிநில கோட்டகத்தில் விண்ணப்பம் அளித்தேன். அத்துடன் ஆதார் அட்டை, பத்திர நகல், பட்டா சிட்டா நகல், பாலத்திற்கான வரைபடம் ஆகியவற்றை இணைத்து கொடுத்தேன். பின்னர் 15 நாட்கள் கழித்து நான் விண்ணப்பம் கொடுத்த அலுவலகத்தில் விசாரிக்க, திருவாரூர் பெரிய கோவிலுக்கு அருகில் உள்ள Sub Division ஆபிஸ் உள்ள SDO, AE ஆகியோர் தான் இடத்தை நேரில் வந்து பார்த்து ஆய்வு செய்ய வேண்டும் எனவே விண்ணப்பத்தினை SDO office அனுப்பிவிட்டேன் என்று சொன்னார்கள். நான் 24.07.2026-ந் தேதி திருவாரூர் பெரிய கோவிலுக்கு அருகில் உள்ள நீர்வளத்துறை ஆபிஸ்க்கு சென்று AE சாரை பார்த்தேன், AE என்னிடம் இடத்தை வந்து நேரில் பார்க்கிறேன் என்று கூறி அனுப்பிவிட்டார். பின்னர் விசாரித்து அவர் பெயர் வினோத் என்று தெரிந்து கொண்டேன். பின்னர் 02.08.2026-ந் தேதி சுமார் 2.30 மணியளவில் AE திரு.வினோத் 9865440164 என்ற எண்ணிலிருந்து எனக்கு போன் செய்து இடத்தை பார்க்க வருவதாக கூறினார். சிறிது நேரத்தில் இருசக்கர வாகனத்தில் AE வினோத்சாரும் மற்றொரு நபரும் என்னுடைய இடத்திற்கு வந்து பாலம் கட்ட போகும் இடத்தையும், வாய்க்காலையும் ஆய்வு செய்துவிட்டு சென்றார்கள். ஆய்வு செய்துவிட்டு என்னை AE தனியாக கூப்பிட்டு பாலம் கட்ட அனுமதி வழங்க SDO க்கும் எனக்கும் சேர்த்து ரூ 3 லட்சம் லஞ்சமாக பணம் கொடுக்க வேண்டும் என்று கூறினார். அவ்வளவு செலவு ஆகுமா என்று கேட்டேன். நீங்க SDO சாரை வந்து பாருங்க என்று கூறி சென்றுவிட்டார். 07.08.2026-ந் தேதி திருவாரூர் AE ஆபிசுக்கு சுமார் 2.00 மணிக்கு சென்றேன். அங்கு AE திரு.வினோத் சார் இருந்தார் அவரை பார்த்து எனது விண்ணப்பம் குறித்து கேட்டேன். நாங்கள் கேட்ட ரூ. 3 லட்சம் லஞ்சபணம் கொண்டுவந்துள்ளீர்களா என கேட்டார். பணத்தை குறைக்க முடியுமா என்று கேட்டேன். அவர் என்னை அழைத்து கொண்டு அருகில் இருந்த SDO அலுவலகத்திற்கு சென்று SDO மாணிக்கவேல் சாரிடம் என்னை அறிமுகம் செய்தார். SDO பாலம் கட்ட வேண்டும் என்றால் நிறைய நடைமுறைகள் இருக்கு அதுக்கு ரூ 3 லட்சம் செலவாகும் என்று என்னிடம் சொன்னார். அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணம் எவ்வளவு என்று கேட்டேன். அளவீடு செய்துதான் தொகை குறித்து சொல்லுவேன். ஆனால் ரூ. 3 லட்சம் லஞ்சமாக கொடுத்தால்தான் வேலை நடக்கும் என்று சொன்னார். நான் பணத்தை ரெடி செய்து விட்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு AE சாருடன் வெளியில் வந்துவிட்டேன். பின்னர் 17.08.2026-ந் தேதி மதியம் சுமார் 1.00 மணியளவில் திருவாரூர் Sub Division ஆபிசுக்கு சென்று SDO மாணிக்கவேல் சாரை பார்தேன். அப்போது அந்த அறையில் AE சாரும் இருந்தார். அப்போது SDO சார் நான் கேட்ட ரூ 3 லட்சம் லஞ்சபணம் எடுத்து வந்துள்ளீர்களா? என்று கேட்டார். அவ்வளவு தொகை என்னால் ரெடி பண்ண முடியவில்லை, தொகை கொஞ்சம் குறைத்து கொள்ளுங்கள் என்று கேட்டேன். SDO சார் கண்டிப்பாக குறைக்க முடியாது ரூ 3 லட்சம் லஞ்சபணம் கொடுத்தால் மட்டுமே பாலம் கட்டுவதற்கான தடையில்லா சான்று வழங்க முடியும் என்று கறாராக கூறிவிட்டார். அரசுக்கு

செலுத்த வேண்டிய தொகை குறித்து SDO சாரிடம் கேட்டேன். SDO சார் வினோத்தை பார்த்து எவ்வளவு என்று கேட்டார். அதற்கு AE வினோத் கணக்கீடு செய்து பார்த்தேன், சுமார் ரூ.25,000/- ஆகும், அதற்கு பில் கொடுத்துவிடுவோம் என்று கூறினார். தொகையை தயார் செய்துவிட்டு AE-யிடம் தகவல் சொல்லுங்கள் என்று SDO கூறினார். வினோத்சார் பணத்தை ரெடி பண்ணிட்டு என்னிடம் பேசுங்கள் என்று சொன்னார். சரி என்று சொல்லி நான் வந்துவிட்டேன். பின்னர் 20.08.2026-ந் தேதி மதியம் சுமார் 12.30 மணியளவில் SDO சாரை பார்க்க திருவாரூர் Sub Division ஆபிசுக்கு சென்றேன். ஆனால் அலுவலகத்தில் SDO, AE இருவரும் இல்லை. ஏற்கனவே இடத்தை பார்க்க வந்த போது AE அவருடைய நம்பரில் இருந்து எனக்கு போன் செய்திருந்தார், அந்த நம்பரை நான் பதிவு செய்து இருந்தேன். நான் என்னுடைய செல் நம்பர் 7708916260 இருந்து AE வினோத் செல் 9865440164 நம்பருக்கு போன் செய்தேன். நான் வெளியில் இருக்கிறேன் அலுவலகம் வரும் வரை காத்திருங்கள் என்று AE வினோத் சொன்னார். சுமார் 15 நிமிடங்கள் கழித்து AE வினோத் சார் SDO அலுவலக வாசலுக்கு இருசக்கர வாகனத்தில் வந்தார். அலுவக வாசலுக்கு அருகில் காத்திருந்த நான் அவரை பார்த்த உடன் நேரில் சென்று சந்தித்தேன். எனக்கும், SDO-க்கும் கொடுக்க வேண்டிய ரூ.3 லட்சம் லஞ்சபணம் கொண்டு வந்துள்ளீர்களா என்று கேட்டார். மாலை தான் 1 ½ லட்சம் ரெடியாகும் அடுத்தவாரம் மீதம் 1 ½ லட்சம் ரெடியாகும் என்று சொன்னேன். அரசுக்கு செலுத்த வேண்டிய ரூ.25,000/- தொகையை செலுத்திவிட்டு ரசீது பெற்று செல்லலாம் என்று வந்தேன் சார் என்று சொன்னேன். அதற்கு AE வினோத் SDO சாருக்கு போன்செய்து பேசிவிட்டு , SDO சார் முதலில் ரூ 3 லட்சம் லஞ்ச பணத்தை கொடுத்தால் தான் அரசுக்கு செலுத்த வேண்டிய தொகைக்கான செலானை வழங்க முடியும் என்று கூறிவிட்டதாக என்னிடம் AE சார் சொன்னார். நான் எதுவும் சொல்லாமல் சரி என்று கூறிவிட்டு வந்துவிட்டேன். எனது சொந்த செலவில் பாலம் கட்டுவதற்கு தடையில்லா சான்று வழங்க ரூ.3,00,000/- லஞ்ச பணம் கேட்டு பலமுறை என்னை அலையவிட்டதனால் நான் மிகுந்த மனஉளைச்சலுக்கு ஆளானேன். தடையில்லா சான்று வழங்க லஞ்சபணம் கேட்டதை கொடுக்க எனக்கு விருப்பமில்லை. என்வே என்னிடம் லஞ்சப்பணம் கேட்ட திருவாரூர் நீர்வளதுறையை சேர்ந்த SDO திரு.மாணிக்கவேல் மற்றும் AE திரு.வினோத் ஆகியோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்கு புகாரினை தயார் செய்து கொண்டு லஞ்சமாக கேட்ட ரூ.3,00,000/- பணம் மற்றும் திருப்பூண்டி சார்பதிவாளர் ஆவண எண் 2269/2024 பத்திர நகல், பட்டா சிட்டா நகல், பாலத்திற்கான வரைபட நகல் ஆகியவற்றை இணைத்து புகார் அளிக்கிறேன். எனது புகார் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். SD.xxxxx A.அபினேஷ் 24/08/2026 Madam/Sir, A computer typed tamil petition, dt.24.08.2026 is received from the complainant today at 07.00 hrs. In this connection, Tmt.G.R.Chitra, Inspector of Police, V&AC, Thiruvarur, is

instructed to verify the content of the petition and reputation of the suspect officers, and proceed further as per law. SD. B.V.Nandagopal 24/8/26 DSP, V&AC, TVR. இன்று 24.8.2026 ந் தேதி 07.00 மணிக்கு மேற்காணும் தமிழ் தட்டச்சு செய்யப்பட்ட புகாரினை பெற்று ஒரு இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இதில் புகாரின் தன்மை உண்மையெனவும், எதிரிகளின் நடவடிக்கை சர்ச்சைக்குரியது என்றும் இரகசிய விசாரணையில் தெரிய வருகிறது. எனவே 24.8.2026 ந் தேதி 09.00 மணிக்கு திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.3/2026 ச/பி 7 of Prevention of Corruption Act 1988 as amended 2018-ன் படி எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

அம்மா, இந்த முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் அசல் புகார்மனு மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்கள் மாண்புமிகு திருவாரூர் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்திற்கும் இதர நகல்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் அலுவலக கோப்பில் வைக்கப்பட்டது.

INSPECTOR OF POLICE,
VIGILANCE AND ANTI CORRUPTION,
THIRUVARUR.
24/8/2026